நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
(சேலம் மாவட்டம்),
நாள். 24.06.2024.

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் ஜீன் –2024ம் மாத அவசர கூட்டம் வருகிற 27.06.2024 ந்தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

24/06/2024
தலைவர்
ஆத்தூர் நகர்மன்றம் .

<u>மன்ற பொருள்கள்</u>

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச்/2024, ஏப்ரல்/2024, மற்றும் மே/2024 ஆகிய மாதங்களின் நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம் ( ந.க.எண். 2023/2023/இ1 )

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்/2024, ஏப்ரல்/2024, மற்றும் மே/2024 ஆகிய மாதங்களின் நாட்குறிப்பினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப் படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம் ( ந.க.எண். 2023/2023/இ1

3. இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் சேமநலநிதிக்கு அரசிடமிருந்து வட்டி பெறப்பட்டு பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டி உள்ளது. ஏற்கனவே(2015–2016முதல் 2022–2023 வரை) நகர்மன்ற தீர்மான எண். 734, நாள்.31.07.2023 செலவினம் ரூ.170000/–க்கு அனுமதித்துள்ளது. தற்போது(2015–2016முதல்2023–2024 வரை)வட்டி கணக்கிட வேண்டி உள்ளது.ஆதலால் ஏற்கனவே அனுமதித்த தொகைக்கு பதிலாக தொகை ரூ.260000/– செலவு மேற்கொள்ள மன்ற அனுமதிக்காகவும் மேற்படி பணியை தனியார் நிறுவனங்கள் மூலம் பணி மேற்கொள்ள 19.02.2024அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. இதில் 06.03.2024 அன்று கீழ் கண்ட நிறுவனங்கள்விலைப்புள்ளி வழங்கி உள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | சஞ்ஜய் சொல்யூசன்ஸ் (komarapalayam) | 260000 |
| 2. | ராம் சொல்யூசன்ஸ் (Chennai) | 273000 |
| 3. | ஓசோன் டெக்நேலஜி (chennai) | 273500 |

மேற்படி நிறுவனங்கள் கொடுத்துள்ள விலை புள்ளியில் வ.எண். 1 ல் உள்ள நிறுவனம் சஞ்ஜய் சொல்யூசன்ஸ் வழங்கிய விலைப்புள்ளி ஏற்பது குறித்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மேற்படி பணிக்கான செலவினம் ரூ.260000/—யை வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம் .

2.குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனம் விலைப்புள்ளியை ஏற்கலாம். ந.க.எண்.1849/2019/பி2).

4. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2024 முதல் 31.03.2027 முடிய மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இனங்களை அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 27.02.2024 அன்று மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் நடைபெற்றும் அதன் அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் கீழ்கண்ட நாளிதழில்களில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஆதலால் விளம்பர நிறுவனங்களுக்கு தொகை வழங்க கோரி பட்டியல் வரப்பட்டுள்ளது.

நாளிதழ்களின் மூலம் வழங்கப்பட்ட பில் பட்டியல் விபரம்.

| வ.எண் | விளம்பர நிறுவனம் | நாளிதழ் பெயர் | செலவுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | AFTERNOON | ENGLISH DAILY | 64,260 |
| 2 | பிற்பகல் | தமிழ் மாலை நாளிதழ் | 40,026 |
| 3 | KAL PUBLICATION | தினகரன் தமிழ் முரசு | 18,900 |
| 4 | AFTERNOON | ENGLISH DAILY | 28,728 |
| மொத்தம் | | | 1,51,914 |

மேற்கண்ட நிறுவனங்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.4185/2023/அ4)

5. ஆத்தூர் நகராட்சியில் வறட்சி காலத்தில் ஒப்பந்ததாரர் திரு.கோவிந்தன் என்பவர் தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ததாகவும் தொகை வழங்கதாதது குறித்து சேலம் மாவட்ட வணிக நீதிமன்றத்தில் வழக்கு எண் COS 15/2023ன் வழக்கு தொடர்ந்துள்ளார் . மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு. A,.மதன் மோகன் அவர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சார்பாக வழக்கில் ஆஜராகியதற்கு வழக்கு கட்டணம் ரூ.14500/– ஐ வழங்க தெரிவித்துள்ளார். அதன் படி மேற்படி வழக்கிற்கு அரசு வழக்கறிஞர் திரு. A,.மதன் மோகன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.14500/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

6. இந்நகாட்சியில் புதிதாக கழிவுநீர் வாகனம் கொள்முதல் செய்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வகையில் Financial Express நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டணம் ரூ.3255/– ஐ Sudha Ads சென்னை விளம்பர நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

7. ஆத்தூர் நகராட்சியில் வறட்சி காலத்தில் ஒப்பந்ததாரர் திரு.கோவிந்தன் என்பவர் தனியார் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ததாகவும் தொகை வழங்கதாதது குறித்து சேலம் மாவட்ட வணிக நீதிமன்றத்தில் வழக்கு எண் COS 15/2023ன் வழக்கு தொடர்ந்துள்ளார் . மேற்படி வழக்கில் அரசு வழக்கறிஞர் திரு. A,.மதன் மோகன் அவர்கள் நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகியதற்கு வழக்கு கட்டணம் ரூ.14500/– ஐ வழங்க தெரிவித்துள்ளார். அதன் படி மேற்படி வழக்கிற்கு அரசு வழக்கறிஞர் திரு. A,.மதன் மோகன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.14500/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம்.

8. நகராட்சி நிர்வாகஇயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 35599/2023/எம்ஏ1, நாள் 23.03.2024 தேதிய கடிதத்தில் தேர்வு நிலை நகாட்சிக்கு மொத்தம் 4 வாகனங்கள் வாங்கி கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் நகர்மன்ற தலைவர் / ஆணையாளர் அவர்களுக்கு ஸ்கார்பியோ வாகனமும் நகராட்சி பொறியாளர் மற்றும் பிற அலுவலர்களுக்கு உபயோகத்திற்கு பொலிரோ வாகனமும் வாங்கி கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆத்தூர் நகராட்சியில் தற்போது நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு 1 ஸ்கார்பியோ வாகனமும் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களுக்கு பொலிரோ வாகனமும் பயன்பாடடில் உள்ளது. எனவே இந்நகராட்சிக்கு ஆணையர் பயன்பாட்டிற்கு ஸ்கார்பியோ வாகனம் கொள்முதல் செய்ய மனறத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணைகள் அனுப்பி அனுமதி பெற்று மேற்படி வாகனத்தை கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

9. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,சேலம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3657/2023/பி1 நாள் 11.01..2024–ன்படி, ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் (Knowledge Center) நூலகராக பணியமர்த்தப்பட்ட திருமதி D.அனுராதா என்பவர் 16.04.2024 முதல் பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு பிரதி மாதம்தோறும் ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. அதற்கான வருடாந்திர உத்தேச செலவினம் ரூ.3,60,000– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், மேற்படி, ஊதியத் தொகையினை ஸ்ரீகார்த்திக் இண்டஸ்ட்ரீஸ், 21,பெரியார் நகர், முத்துநாயக்கன்பட்டி மெயின்ரோடு, பழைய சூரமங்கலம், சேலம்–5 என்ற நிறுவனத்தின் மூலமாக அனுப்பப்பட்டு நூலகர் திருமதி D.அனுராதா அவர்களுக்கு ஊதியம் அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மன்றம் அனுமதிக்ககலாம். மேற்படி ஊதியச் செலவினத்தை வருவாய் நிதி அல்லது கல்வி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.(சி1/1355/2024

10. ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள கிராம புல எண் 167/2,5,7,8,14,15,16,17 வார்டு – பி, பிளாக்–9, நகரளவை எண்.1/3,1/9 இல் 1.50 ஏக்கர் நிலத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோக பகுதியிலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய திரு. A.B.ராஜமகேந்திரன் & திரு.K.B. குமரேசன் என்பவரின் 26.02.2024 .ஆம் தேதிய விண்ணப்பம் வரப்பெற்றதின் பேரில் கடந்த 25.04.2024 அன்று INDIAN EXPRESS என்ற ஆங்கிலம் நாளிதழிலும், தினமணி என்ற தினசரி தமிழ் நாளிதழிலும் மனுதாரரால் இவ்வலுவலக முகவரியிடப்பட்டு பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி செய்தி வெளியான நாளிலிருந்து 30 தினங்கள் வரை பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசணை மற்றும் ஆட்சேபணைகளும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வது தொடர்பாக உள்ளூர் திட்டக்குழுமத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அதன் படி மேற்படி வழக்கிற்கு நகராட்சி சட்ட ஆலோசகர் திரு. S,.கதிரேசன், வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.5000/—த்தை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கலாம். ( ந.க.எண் 2481/2024/இ1)

13. ஆத்தூர் நகராட்சி சொந்தமான மேல்நிலை நீர்தேக்க தொ.டிகளுக்கு காவலர் பணி மற்றும் நகர் முழுவதும் உள்ள மின் மோட்டார் இயக்குதல் பணி பணிகளை ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்பணியாளர்களை ஒப்பந்த அடிப்படை முறையில் குடிநீர் விநியோக பணிகள் மேற்கோள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தப்பணியாளர்கள் மூலமாக பணியில் அமர்த்தி கொள்ள ஆகும் செலவினம் ரூ. 12.90 இலட்த்திற்கு இந்நகர்மன்ற தீர்ரான எண் 877 நாள் 15.02.2024 ல் அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு. மெஸாஸ். பழனி இஞ்சினியரிங் ஒர்க்ஸ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான பணிக்காலம் 30.06.2024 முதல் 6 மாதங்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டு மாதத்திற்கு 01.07.2024 முதல் 31.082024 வரை நீட்டிப்பு செய்யவும் அதற்குரிய கூடுதல் செலவினம் ரூ. 5.70 இலட்சத்திற்கு அனுமதிக்கும் , மேற்படி பணிகளில் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. மெஸாஸ். பழனி இஞ்சினியரிங் ஒர்க்ஸ் அவர்களின் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் . ( ந.க.எண் 3585/2023/இ1)

14. இந்நகராட்சி சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் மதிப்பீடு ரூ.376.00 இலட்சத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022– 23ம் கீழ் புதிய கடைகள் அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கி தற்போது 80 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இக்கட்டிடத்தின் மேற்கு பகுதியில் புதிதாக G.I. சீட்டலான 21 எண்ணிக்கைலான கடைகள் வருவாய் ஈட்டும் வகையில் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ. 27.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தை வருவாய் நிதியிருந்து மேற்கொள்ளவும் மற்றும் இக்கடைகளுக்கு பொது ஏலத்தின் பெறப்படும் தொகையினை இச்செலவினத்தை ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.1863/2024/இ1)

15. ஆத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண் 31ல் , அம்பேத்கார் நகர் பகுதியில் SBM 2.o திட்டத்தின் கீழ் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கழிப்பிட பணியில் சில கூடுதல் இனங்கள் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இப்பணிக்கு கூடுதல் மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மனுதாரரின் 1.50 ஏக்கர் நிலத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. செய்தி வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் வரை பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசணை மற்றும் ஆட்சேபணை ஏதும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் அளித்து அனுமதிக்கலாம். (ந.க.எண்.0505 /2024 /எப்1)

11. ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு –எ, பிளாக்–12, நகரளவை எண்.6,7 இல் உள்ள 7.20 ஏக்கர் நிலத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோக பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்ய திரு. ஜெ.ஸ்டாலின் த/பெ ஜெகதீசன் என்பவரின் 23.02.2024 .ஆம் தேதிய விண்ணப்பம் வரப்பெற்றதின் பேரில் கடந்த 24.04.2024 அன்று INDIAN EXPRESS என்ற ஆங்கிலம் நாளிதழிலும், தினமணி என்ற தினசரி தமிழ் நாளிதழிலும் மனுதாரரால் இவ்வலுவலக முகவரியிடப்பட்டு பிரசுரம் செய்யப்பட்டது. மேற்படி செய்தி வெளியான நாளிலிருந்து 30 தினங்கள் வரை பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசணை மற்றும் ஆட்சேபணைகளும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள இடத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்வது தொடர்பாக உள்ளூர் திட்டக்குழுமத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மனுதாரரின் 7.20 ஏக்கர் நிலத்தினை அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றம் செய்ய தினசரி நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. செய்தி வெளியிடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் வரை பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆலோசணை மற்றும் ஆட்சேபணை ஏதும் இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே மேற்படி நகரளவு எண்ணில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்ய உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் அளித்து அனுமதிக்கலாம். (ந.க.எண்.0504/2024 /எப்1 )

12. திரு. முருகேசன் என்பவர் , கருப்பனார் கோவில் அருகில் தெற்குகாடு ஆத்தூர் என்பவர் தனஙகளு சொந்தமான இடமான T.S.No 9/10 S.No 861 என்ற சர்வே எண் கொண்ட இடத்தில் இந்நகராட்சியால் சாலை அமைக்கப்பட்டுள்ளதாக மாண்புமை மாவட்ட மூன்சீப் நிதிமன்றத்தில் வழக்கு தொர்டர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கில் நகராட்சி சட்ட ஆலோசகர் திரு. S,.கதிரேசன், வழக்கறிஞர் அவர்கள் நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகியதற்கு வழக்கு கட்டணம் ரூ.5000/– த்தை வழங்க தெரிவித்துள்ளார்.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேலும் இந்நகராட்சியின் நிதி நிலைமை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு SBM 2.o திட்டத்தில் உள்ள தொகையை ஈடு செய்து கொள்ளவும், இப்பணியை பாதியில் நிறுத்திய ஒப்பந்ததாரருக்கு உண்டான தொகையை வழங்கும் பட்சத்தில் ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் சட்ட விதிகளுக்குட்பட்டு உரிய தொகையை பொது நிதியிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.1866/2024/இ1)

16. ஆத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண் 26, பைத்தூர் ரோடு பகுதியில் SBM 2.o திட்டத்தின் கீழ் சமுதாய கழிப்பிடம் கட்டுதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கழிப்பிட பணியில் சில கூடுதல் இனங்கள் மற்றும் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இப்பணிக்கு கூடுதல் மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேலும் இந்நகராட்சியின் நிதி நிலைமை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு SBM 2.o திட்டத்தில் உள்ள தொகையை ஈடு செய்து கொள்ளவும், இப்பணியை பாதியில் நிறுத்திய ஒப்பந்ததாரருக்கு உண்டான தொகையை வழங்கும் பட்சத்தில் ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் சட்ட விதிகளுக்குடப்பட்டு உரிய தொகையை பொது நிதியிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண் 1864/2024/இ1 )

**17.** ஆத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண் 13ல் கம்ப பெருமாள் கோவில் தெருவில் உள்ள பழுதடைந்த பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கழிப்பிட கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்த நகர்மன்ற துணைத்தலைவர் அவர்கள் கடிதத்தின் மூலம் கோரியுள்ளார். மேலும் மேற்கண்ட இடம் நேராய்வு செய்யப்பட்டதில் கழிப்பிடமானது சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டப்பட்டு தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் சிதலமைடைந்து உள்ளது. மேலும் சமூக விரோத செயல்களும் நடைபெற்று வருவதால் அப்பகுதி பொதுமக்களின் நலன் கருதி உரிய அனுமதி பெற்று கழிப்பிட கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 1674/2024/இ1)

18. ஆத்தூர் நகராட்சிக்குட்பபட்ட வார்டு எண் 16ல் குமணன் தெருவில் உள்ள பழுதடைந்த பாதுகாப்பற்ற நிலையில் உள்ள கழிப்பிட கட்டிடத்தை இடித்து அப்புறபடுத்த படுத்தி புதிய கழிப்பிட கட்டிடம் கட்ட நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியதற்கிணங்க, மேற்கண்ட இடத்தில் SBM 2.o திட்டத்தின்கீழ் ரூ. 24.96 இலட்ச மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட இடத்தில் உள்ள மிகவும் பழுதடைந்துள்ள உபயோகமற்ற மற்றும் அபாயகரமாக உள்ள கழிப்பிட கட்டிடத்தை உரிய அனுமதி பெற்று இடித்து அப்புறபடுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். ( ந.க.எண் 1865/2024/இ1)

19. இந்நகராட்சிக்கு சொந்தமான பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் வாகன எண் TN 27 x 4388 வாகனம் சுமார் 25 (1998) ஆண்டுகளுக்கு முன் கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் மேற்படி வாகனம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு வருகிறது. தற்போது இவ்வாகனத்திற்கு 09/2024 முடிய தகுதி சான்று அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் வாங்கி 25 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதபடியால் அடிக்கடி பழுது ஏற்பட்டு செலிவினங்கள் அதிகமாவதாலும் மேற்படி வாகனத்தை கழிவு செய்து விட்டு, புதிதாக குடிநீர் லாரி வாகனம் கொள்முதல் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணைகள் அனுப்பி அனுமதி பெற்று மேற்படி வாகனத்தை ஏதேனும் ஒரு திட்ட நிதியில் கொள்முதல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

20. ஆத்தூர் நகராட்சி பகுதியில் பணிபுரிந்து வரும் DBC பணியாளர்களை 30.06.2024 வரை பணி நீட்டிப்பு செய்து நகர்மன்ற தீர்மானம் எண்.940, நாள்.04.03.2024–ல் அனுமதிக்கப்பட்டது.2024 ஜீன் மாதத்துடன் முடிவடைவதால் தற்போது மழைக்காலம் ஆரம்பித்து வருவதை கருத்தில் கொண்டு மேற்படி பணியாளர்கள் நோய் தடுப்பு பணியில் தொடர்ந்து ஈடுபடுத்திட வேண்டியுள்ளது. எனவே ஜீலை மற்றும் ஆகஸ்ட்–2024 ஆகிய இரண்டு மாதங்கள் பணி நீட்டிப்பு செய்யவும் ஊதிய செலவினமாக உத்தேச தொகை ரூ.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி பணியில் ஈடுபட்டு வரும் ஸ்ரீஉதயா மகளிர் சுயஉதவி குழுவினரை தொடர்ந்து பணிபுரியவும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒரு நபருக்கான ஊதியம் ரூ.524/– வீதம் வழங்கிடவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண் 1663/2023/எச்1 )

21. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அட்டவணை I, II, மற்றும் III ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிம கட்டணம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023–ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. இதன்படி இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக்கட்டணம் 01.04.2025 ஆம் தேதிமுதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின்அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

## வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள் , தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம்– (1) அட்டவணைகள் I, II, III –ல் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அல்லது தனியார் என, எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும், ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது..

அத்தகைய உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் ஆத்தூர் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்படவேண்டும்.

தனிநபரைப் பொறுத்தவரையில் ஆதார் அடையாள அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்குஎண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணப்பிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்துவரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

செல்லுபடியாகக்கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர்படிவம் –17 இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்கவேண்டும்.

அட்டவணை 1 ன் கீழான விண்ணப்பங்களுக்கு, நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரிவிபர அறிக்கை அல்லது வருமான வரிவிபர அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது எந்தவொரு வரிவிபர அறிக்கையும் விண்ணப்பத்தாரரிடம் இல்லையெனில் அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18 –இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள்விதி (1) –இன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும், அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும், 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 உள்விதி (5)ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம், பிரிவு (6) ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு, மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக்கட்டணத்துடன், படிவம் I–ல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்போது , உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக் கூடாது.

அட்டவணை I, II, III, மற்றும் IV ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக்கட்டண விகிதங்கள் 01.04.2025 ந் தேதி முதல் அமுலுக்கு வரும்.

குறிப்பு:– (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல்தேதி துவங்கி மார்ச் 31 ம் தேதி முடிவடையும்.

அட்டவணை I

[ See rules 289(1), (2) and (5)]

1. **பொருந்தக்கூடிய தன்மை :**

1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் (1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXIII), 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (1951–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருந்தும்.

2. **உரிமக்கட்டணம் :**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக்கட்டணம், 2006ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

அ.விண்ணப்பதாரர், ஒரு செல்லுபடியாகக் கூடிய உதயம் பதிவினை கொண்டிருக்கவில்லையெனில், அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் (GSTஎண்) அல்லது சமீபத்திய வருமானவரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும்.

ஆ. விண்ணபத்தாரர், ஒரு செல்லுபடியாகக்கூடிய உதயம் பதிவுச்சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில், உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளித்து, படிவம் 17 ல் உள்ள பிரமாணப்பத்திரம் ஒன்றை அவர் சமர்ப்பிக்கவேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்த பட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமக் கட்டணங்களுக்கான பட்டியல்

(a) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 1500/- | 3,500/- |

(b) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5,000/- |

(c) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10,000/- |

(d) மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை(ஒரு வருடத்திற்கான கட்டணம்)

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10,000/- | 35,000/- |

தொழில் நிறுவனங்களின் பட்டியல் : (ஒருவருடத்திற்கானகட்டணம்)

| வ. எ | வர்த்தகங்கள் / வியாபாரங்களின் பட்டியல் : | குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் | மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 1700/- | 3700/- | 8000/- | 11000/- |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | 1700/- | 3700/- | 8000/- | 11000/- |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1600/- | 3700/- | 7700/- | 10500/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள்(மின் மோட்டர்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 13 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1700/- | 3700/- | 8000/- | 11000/- |
| 15 | செங்கல் சூளைகள் | 1700/- | 3700/- | 8000/- | 11000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை பொருட்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைதஉற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabrication Works) | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகூட்டல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 21 | அனைத்து வகையான இரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 25 | கொதிகலன் உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 26 | காற்றுப் பதனிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 28 | அனைத்து வகையான எழுதுபொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோக பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 36 | துப்பரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1600/- | 3700/- | 7700/- | 10500/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 40 | அனைத்து வகையான தோல் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2500/- | 5000/- | 10000/- | 12500/- |
| 41 | அனைத்து வகையான மர/பிளைவுட்/சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 42 | அனைத்து வகையான வன்பொருள்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 43 | அனைத்து வகையான விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 2000/- | 4000/- | 9000/- | 12000/- |

## அட்டவணை II

[See rules 289 (1),(2) and (5)]

**1. பொருந்தும் தன்மை:**

(1) இந்த அட்டவணை, எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்தவொரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும், அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள், கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

2. பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:–

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பாடுகள்.
2. 2013–ம் ஆண்டு நிறுமச் சட்டத்தின் கீழ் (2013–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள்.
3. சம்மந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing Centres) மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்.
4. 1959–ம் ஆண்டு படைக்கலச் சட்டம் (1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் (1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934 –ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும் 1952–ம் ஆண்டு ஒளிப்பதிவுச் சட்டத்தின் கீழ் (1957–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்
5. 2010–ம் ஆண்டு மருத்துவ நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் (2010 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 23).

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –ல் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமக் கட்டணங்களுக்கான பட்டியல்

1. உரிமக் கட்டணம் (ஒருவருடத்திற்கான கட்டணம்):

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சிமன்றம் | 700/– | 10,000/– |

2. வர்த்தகங்கள் அல்லது வியாபாரங்களின் பட்டியல் :

| வ. எண் | வர்த்தகங்கள்/வியாபாரங்களின் பட்டியல் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|---|
| 1 | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 2 | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 3 | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 4 | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு சர்வீஸ் மையங்கள் | 1000 |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை விற்பனை செய்தல் | 1500 |
| 8 | கழிவுத்தாள் கடை/பழைய வேண்டாத பொருட்கள் | 1000 |

| | | |
|---|---|---|
| 9 | நூற்பு வேலைகள் | 1000 |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் (Air conditioner) | 1000 |
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 750 |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Machines) | 1000 |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 750 |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 2000 |
| 17 | தலைக்கவச கடைகள் | 1500 |
| 18 | இரு சக்கர வாகனகங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 1500 |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கனரக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 1000 |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 1500 |
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங் களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 24 | அனைத்து வகையான இரசாயனப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் (Hardwares) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 31 | அனைத்து வகையான எழுதுபொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 32 | அனைத்து வகையான கட்டுமானப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 33 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |

| | | | |
|---|---|---|---|
| 34 | அனைத்து வகையான வீட்டுஉபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | |
| 35 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (தளவாட சமான்கள்) | 1000 | |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | |
| 40 | அனைத்து வகையான மறுபட்டையிடப்பட்ட டயர்கள்/டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | |
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | |
| 42 | அனைத்து வகையான அறைகலன்களையும் (Furnitures) சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 | |
| 43 | அனைத்து வகையான மர / ப்ளைவுட்/ சன்மைகா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 | |
| 44 | மர வடிவமைப்புகள் விற்பனை | 1000 | |
| 45 | ஷாமியானா மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 1500 | |
| 46 | அனைத்து வகையான தோல் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | |
| 47 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 | |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 | |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | |
| 50 | அழைப்பிதழ்கள்/வாழ்த்து அட்டை விற்பனை/ அச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 1500 | |
| 51 | மருந்துக்கடைகள் | 1000 | |
| 52 | மருத்துவ உபகரணங்கள்/சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | |
| 53 | மூங்கில், தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | |
| 54 | எரியக்கூடிய பொருட்கள், ஃபிலிம் செல்லுலாய்டு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 | |

| | | |
|---|---|---|
| 55 | புல் மற்றும் வைக்கோலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 750 |
| 56 | முட்டுக்கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 1500 |
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1500 |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 5000 |
| 60 | வாகன நிறுத்த நிலையங்கள் | 1000 |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் | 5000 |
| 62 | பார்சல் புக் செய்யுமிடங்கள்/ தூதஞ்சல் (Courier) சேவைகள் | 1000 |
| 63 | கேபிள் டி.வி சேவைகள் | 2000 |
| 64 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 65 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 1000 |
| 66 | பட்டாணி வறுவல் | 750 |
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 1000 |
| 68 | பஞ்சு மெத்தை/தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 750 |
| 70 | பல்பொருள் அங்காடி | 2000 |
| 71 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ–சேவை மற்றும் இணைய நிலையம் | 1000 |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 1000 |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் | 1000 |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 1000 |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 1000 |
| 76 | பொற்கொல்லர்கள் | 1000 |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 1500 |
| 78 | டைல்ஸ் / மார்பிள்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 80 | முடி வெட்டும் நிலையங்கள் | 1000 |
| 81 | அழகு நிலையங்கள் /தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத /ஸ்பாஸ் (Spa's) | 1000 |
| 82 | தையல் கடைகள் | 1000 |
| 83 | சலவையகங்கள் | 1000 |

| | | |
|---|---|---|
| 84 | வினைல் போர்டு கடைகள் | 1000 |
| 85 | காலணி கடைகள் | 1000 |
| 86 | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுது பார்த்தல்) | 1000 |
| 87 | மிதி வண்டி மற்றும் மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 1000 |
| 88 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 1000 |
| 89 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 5000 |
| 90 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theatre) | 1000 |
| 91 | அச்சகங்கள் | 1000 |
| 92 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 1000 |
| 93 | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 1000 |
| 94 | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 1000 |
| 95 | நெல் அவித்தல் | 1000 |
| 96 | மரம் அறுக்கும் ஆலைகள் | 1000 |
| 97 | FCS ஆலைகள்(Farm and commercial Storage Manufacturing) | 1000 |
| 98 | அரிசி ஆலைகள் | 2000 |
| 99 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 100 | கோழி இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 101 | ஆட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 102 | கோழி இறைச்சி மற்றும் ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 2000 |
| 103 | மாட்டு இறைச்சியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | - |
| 104 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 105 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 1000 |
| 106 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 107 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 108 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள், ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 109 | மருத்துவ ஆய்வகங்கள் | 1000 |
| 110 | அனைத்து வகையான செல்லபிராணிகள் கடைகள் | 1000 |
| 111 | அனைத்து வகையான கால்நடைகள்/பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 112 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 1000 |
| 113 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 114 | காய்கறிகள், பழுங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |

| | | |
|---|---|---|
| 115 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 1000 |
| 116 | பேக்கரிகள் | 1500 |
| 117 | பழச்சாறு கடைகள் | 1000 |
| 118 | AMF (Assured Minimum Facility) உடன் டீ கடைகள் | 1000 |
| 119 | நீர்வாழ்வன காட்சிசாலை(Aquarium) | 1000 |
| 120 | ஊறவைத்த தானியங்களை அரைத்தல் | 1000 |
| 121 | சுற்றுலா மற்றும் பயண மையங்கள் | 1000 |
| 122 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 2000 |
| 123 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 1000 |
| 124 | மேற்குறிப்பிட்ட இணங்களைத் தவிர நகராட்சி பகுதியில் தொழில் உரிமம் அவசியம் என நகராட்சியால் கருதப்படும் இதர இனங்கள் | 1500 |

## SCHEDULE III

[See rules 289 (1), (2) and (7)]

(1) பொருந்தும் தன்மை :– இந்த அட்டவணை, –

(1) தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள், சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகங்கள்.

(2) 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச்சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான, வாராந்திர ,மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற ,தங்கும் இடங்கள், தங்கும் விடுதிகள், சத்திரம் ,மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும்

(3) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள், அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்றபிற பொதுக்கூட்டங்களாகப் பயன்படுதப்படுகிற அனைத்து பொதுக்கூட்டங்களுக்கம் பொருந்தும்.

(4) 2) உரிம கட்டணம் (ஒருவருடத்திற்கான கட்டணம்):

(i)தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கைக் கூடங்களுடன் கூடிய உணவுக்கூடங்கள், சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகங்கள்.

விதிகளில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்தபட்சம் ரூ.1000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.15000/–
(ஒரு வருடத்திற்கான கட்டணம்):

| தொழில் விபரம் | 01.04.20250முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| சமையலறை மற்றும் இருக்கைக்கூடங்களுடன் கூடிய உணவுக்கூடங்கள், சிற்றுண்டிச்சாலை அல்லது உணவகங்கள். | சிற்றுண்டிச்சாலைக்கு –1200/–<br>உணவகம் ,<br>உணவுக்கூடங்களுக்கு – 2000/– |

(ii) 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள்.

விதிகளில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக்கட்டணம் குறைந்த பட்சம் ரூ.1500/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.3500/–
(ஒரு வருடத்திற்கான கட்டணம்):

| தொழில் விபரம் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 2014–ம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள். | 2000/– |

(iii) 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற ,தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம் ,தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள்

விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிமக் கட்டணம் குறைந்த பட்சம் ரூ.3000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.30000/–

(ஒரு வருடத்திற்கான கட்டணம்):

| தொழில் விபரம் | 01.04.2025 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| (1) | (2) |
| 1939–ம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான வாதாந்திர, மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற, தங்கும் இடங்கள், சத்திரம், மாளிகை, விருந்தினர் இல்லம், தொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள் | 4000/– |

(iv) திருமணமண்டபங்கள், விருந்துமண்டபங்கள் அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுதத்ப்படும் அத்தகைய மற்றபிற பொதுக்கட்டடங்கள்

விதிகளில் அட்டவணைப்படுத்தப் பட்டுள்ள தொழில் உரிமக் கட்டணம் குறைந்த பட்சம் ரூ.3000/– அதிகப்பட்ச கட்டணம் – ரூ.30000/–

(ஒருவருடத்திற்கானகட்டணம்):

| தொழில்விபரம் | 01.04.2025 முதல் நிர்ணயம்செய்யப்படும் கட்டணம் ரூபாயில் |
|---|---|
| திருமண மண்டபங்கள் | 5000/- |
| விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக்கூட்டங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுதத்ப்படும் அத்தகைய மற்றபிற பொதுக்கட்டடங்கள் | 2500/- |

மேற்கண்ட விபரப்படி உரிமக்கட்டணங்களை 01.04.2025– ம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூலித்து உரிமங்கள் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண் 949/2024/எச்1)

33. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட கடைகள் மாத உரிமம் 31.03.2024 உடன் முடிவடைந்துள்ளது. 01.04.2024 முதல் 31.03.2027 வரை உள்ள 3 ஆண்டு காலத்திற்கு குத்தகை உரிமத்தை 15 சதவீதம் உயர்வு செய்து (மூன்றாம்/இறுதி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) ) துறையின் அரசாணை (நிலை) எண்.92, நாள்.03.07.2007 ஆம் தேதியிட்ட ஆணையில் பத்தி எண் 4, வ.எண்.IV –ல் தெரிவித்துள்ளபடி தன்னியல்பாக புதுப்பித்துக் கொடுத்தமைக்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

புதுப்பிக்க வேண்டிய கடைகளின் விபரம்.

| வ.எண் | வரிவிதிப்பு எண்/ சொத்து எண் | கடை விபரம் மற்றும் உரிமதாரர் பெயர் | 31.03.2024 மாத வாடகை | 01.04.2024 முதல் 31.03.2027 வரை மாத வாடகை ( 15 சதவீதம் உயர்வு |
|---|---|---|---|---|
| 1 | 045/331 – 218 | குடோன் வாரச் சந்தை தினசரி மார்க்கெட் கடை எண் 7 – ரா.தமிழ்செல்வி | 1725 | 1984 |
| 2 | 045/334 – 103 | அக்ரஹாரம் கடை எண் 2 – ந.மோகன் | 1772 | 2038 |
| 3 | 045/336 – 105 | அக்ரஹாரம் கடை எண் 4 – ஜெ.சுகுமாரன் | 2500 | 2875 |
| 4 | 045/366 – 135 | ரோடு மார்ஜின் பங்க் ஸ்டால் கடை எண் 14 – அ.டி.சாதிக்பாஷா | 2875 | 3306 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 045/407 – 238 | அண்ணா பவளவிழா மேற்குப்புற கடை எண் 9 – ப.ரவி | 2300 | 2645 |
| 6 | 045/439 – 257 | தினசரி சந்தை கடை எண் 16 – ரா. அகிலா | 2303 | 2648 |
| 7 | 045/450 – 268 | தினசரி சந்தை கடை எண் 16 – அ. லோகநாதன் | 4025 | 4629 |
| 8 | 045/457 – 275 | வடக்குப்புற தினசரி சந்தை கடை எண் 1 – ச.சரவணன் | 2875 | 3306 |
| 9 | 045/459 – 277 | வடக்குப்புற தினசரி சந்தை கடை எண் 3 – ம. வினோத்குமார் | 2875 | 3306 |
| 10 | 045/461 – 279 | வடக்குப்புற தினசரி சந்தை கடை எண் 5 – ச.ஜெய்குமார் | 2875 | 3306 |
| 11 | 045/471 – 398 | மண்டிகள் மற்றும் அறைகள் கடை எண் 10 – ப.சடையன் | 2875 | 3306 |
| 12 | 045/472 – 399 | மண்டிகள் மற்றும் அறைகள் கடை எண் 11 – சி.முருகன் | 2875 | 3306 |
| 13 | 045/494 – 572 | பழைய பேருந்து நிலையம் தெற்குப்புற கடை எண் 1 – ச.டி.திலீப்குமார் | 622 | 715 |
| 14 | 045/6051 – 41 | பழைய பேருந்து நிலையம் உட்புறம் கடை எண் – 5 – க.தண்டபாணி | 4025 | 4629 |
| 15 | 045/6052 - 42 | பழைய பேருந்து நிலையம் உட்புறம் கடை எண் – 6 – க.தண்டபாணி | 4025 | 4629 |
| 16 | 045/7234 – 250 | தினசரி மாக்கெட் கடை எண் 9 – ம. அருண் | 2300 | 2645 |
| 17 | 045/9483 – 412 | டிரக் டெர்மினல் கடை எண் 4 – கோ. ராஜேந்திரன் | 2300 | 2645 |
| 18 | 045/11488 – 417 | டிரக் டெர்மினல் கடை எண் 17 – எம்.பி.சுஜாதா | 561 | 645 |
| 19 | 045/15392 – 163 | நீதிமன்ற கட்டிடம் எண் 3 – வி.என்.முருகேசன் | 21266 | 24456 |
| 20 | 045/337 – 106 | அக்ரஹார கடை எண் 5 – ராஜா | 1725 | 1984 |
| 21 | 045/6023 – 13 | பழைய பேருந்து நிலைய உட்புற கடை எண் 6 – ராஜா | 7475 | 8596 |

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | 045/1536 – 161 | நீதிமன்ற கட்டிடம் எண் 1 – விவேக்கண்ணா | 2070 | 2381 |
| 23 | 045/1537 – 161 | நீதிமன்ற கட்டிடம் எண் 2 – விவேக்கண்ணா | 2579 | 2966 |
| 24 | 045/395 – 222 | தாய்சேய் நலவிடுதி மேற்குப்புற கடை எண் 1 – சையத் சாப்தீன் | 7495 | 8619 |

அலுவலக குறிப்பு –பதிவு செய்யலாம். (ந.க.எண்.1557/2019/அ4)

22. இந்நகராட்சியில் 2024–2025 ஆம் ஆண்டில், இவ்வலுவகத்தில் பணிபுரிந்த ஒய்வு பெற உள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அசல், வட்டி மற்றும் நிர்வாகப் பங்குத் தொகையை பணியாளர்களுக்கு வழங்கவும், பணியடையே பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் அசல் மற்றும் வட்டித் தொகை வழங்க அதற்காகும் செலவினங்களை வருவாய் நிதியில் மேற்கொண்டு தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1849/2019/பி2).

23. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2024 முதல் 31.03.2027 முடிய மூன்றாண்டு காலத்திற்கு ஆண்டு இனங்களை அனுபவித்துக் கொள்ளும் உரிமையை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி/பொது ஏலம் 22.02.2024 அன்றும் 27.02.2024 அன்றும் நடைபெற்றபோது காணொலி மூலம் பதிவு செய்யவும் மற்றும் புதிய பேருந்து நிலையம் புதுப்பிப்பதற்காக புகைப்படம் எடுத்ததற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,000/–ஐ அனுமதிக்க மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.659/2024/அ4)

24. ஆத்தூர் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட மாத உரிமை இனங்களை பலமுறை பொது ஏலம் விட்டும் ஏலம் போகாமல் காலியாக இருந்து வருகிறது. தற்போது ராணிப்பேட்டை கடைத் தெருவில் உள்ள அண்ணா பவள விழா கட்டிடம் மேற்குப்புற கடைகளில் கடை எண்கள் 3,4,7 மற்றும் உட்புற கடைகள் 21 மற்றும் 24 ஆகியவற்றை மார்ச்–2024 வரை உள்ள கேட்புத் தொகை முழுவதும் செலுத்திவிட்டு கடையினை நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டதால் அதனையும் சேர்த்து பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**01.04.2024 முதல் 3 ஆண்டுகளுக்கு மாத உரிமை இனங்களை ஏலம் விடக்கூடிய கடைகளின் விபரம்**

| வ.எண் | கடைகளின் விபரம் | வைப்புத் தொகை ஒவ்வொரு கடைகளுக்கும் தலா ரூ. |
|---|---|---|
| | **ஏலம் விடக்கூடிய கடைகள்** | |
| 1 | ராணிப்பேட்டை கடைத் தெருவில் உள்ள அண்ணா பவள விழா கட்டிடம் மேற்குப்புற கடைகள் ( 4 கடைகள் ) – 3,4,7,21 மற்றும் 24. | ரூ.30,000/– |
| 2 | நகராட்சி அலுவலகம் முன்புறம் உள்ள மேற்குப்புற கட்டிடம் (2000 சதுர அடி) | ரூ.10,00,000/– |
| | 3–வது அழைப்பு | |
| 3 | புதுப்பேட்டை வார சந்தைப் பேட்டை கடைகள் ( 16 கடைகள் ) கடை எண்கள் 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15 மற்றும்16 வரை. | ரூ.50,000/– |
| 4 | புதிய பேருந்து நிலைய கடைகள் ( 7 கடைகள் ) கடை எண்கள்– 32,41,43,47,57,59 மற்றும் பொருள் பாதுகாப்பு அறை அருகில் உள்ள கடை . | ரூ.1,00,000/– |
| 5 | புதிய பேருந்து நிலைய கடைகள் (3 கடைகள் ) கடை எண்கள். 62,62 மற்றும் 65. | ரூ.1,50,000/– |
| 6 | புதுப்பேட்டை வார சந்தை எதிப்புறம் வடபுறம் உள்ள மீன் மார்க்கெட் கடைகள் (18 கடைகள்) –1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17 மற்றும் 18. | ரூ.50,000/– |
| 7 | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள MUDF கடைகள் (28 கடைகள்) – 9,10,11,13,14,15,17,18,19,20,21,22,23,25,26,27,28,29,30,31,32,33,34,35,36,37,38 மற்றும் 38. | ரூ.30,000/– |
| 8 | மண்டிகள் மற்றும் அறைகள் முதல் தளம் கடை எண் – 2 | ரூ.1,00,000/– |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்க கோரும் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.( ந.க.எண் 4762/2016/அ4 )

24/06/2024

தலைவர்
ஆத்தூர் நகர்மன்றம்